மூலமாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கும் எந்தப் பதிலும் வரவில்லை. ஆகவே, மைய அரசுதான் இந்தச் சுங்கச்சாவடிக் கொள்கையை வகுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அவர்கள் போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் சுங்கக் கட்டணம் உயர்த்தி வசூல் செய்யப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

108—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***38298—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், கூடுவாஞ்சேரி ஊராட்சி, பரிக்குப்பட்டு பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற அரசு, 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு புல எண் 45-ல் இடம் தேர்வு செய்துள்ளது. அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு, பரிக்குப்பட்டு

2015 ஏப்ரல் 1]

அங்கன்வாடி மையம் பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 2,094 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அவற்றில் 1,679 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களிலும், 157 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், 258 அங்கன்வாடி மையங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15,315 அங்கன்வாடி மையங்களுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஆகவே, விரைவில் பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையம் செயல்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரணி பாடி தரணி வணங்கும் எங்கள் குலதெய்வம்! ஏழை, எளியோர் பசிப்பிணிப் போக்க உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எங்கள் அன்னபூரணி! சர்வ சமய பக்தர்களும் பசியாறும் வகையில் 518 கோயில்களிலே அன்னதானத் திட்டம் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அமுது படைக்கும் எங்கள் வாழும் மனித தெய்வம்! ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பொன்னேரி அகத்தீஸ்வரர் கோயிலின் 110 ஆண்டுகள் தடைப்பட்டிருந்த பங்குனி மாத பிரமோற்சவ விழாவை நடத்துவதற்கு ஆணையிடப்பட்டு, தற்பொழுது அவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு பொன்னேரி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் பசி அறிந்து பாலூட்டுபவர் தாய்; தமிழக மக்களின் தேவை அறிந்து சேவை செய்பவர் மாண்புமிகு மக்களின் முதல்வர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்பார்கள். எங்கள் கேள்வி அவைக்கு வருவதற்கு முன்பே, எங்களின் தேவையை அறிந்து, பொன்னேரி தொகுதிக்குட்பட்ட கூடுவாஞ்சேரி ஊராட்சி, பரிக்குப்பட்டிலே அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டப்பட்டு வருவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1992 ஆம் ஆண்டு முதல் 218 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து அங்கன்வாடி மையங்களின் மைய அலுவலகமான குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இலவம்பேடு பகுதியிலே சர்வே எண் 365/3-ல் 10 சென்ட் நிலம் ஊராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்திருக்கிறேன். குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் தனியாக எந்த நிதி ஒதுக்கீடும் செய்வதில்லை. அதற்குப் பதிலாக, ரூ.3,500 மட்டும் வாடகையாகத் தருகிறார்கள். அந்த வாடகையை வைத்துதான் தற்பொழுது குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்கென்று சில அதிகார வரம்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட ஒன்றிய அலுவலகம் கேட்கின்ற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அறிக்கை பெற்று, பொன்னேரி தொகுதியிலே அந்த அலுவலகம் திறப்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 *ஏப்ரல்* 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 10-30

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர், மங்கையர் குல தெய்வம், முகராசி படைத்த மகராசி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கின்ற தூத்துக்குடி 45-வது வார்டு, கோல்டன்புரம் பகுதியில் அங்கன்வாடி மையம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,315 அங்கன்வாடி மையங்களுக்கும் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துருவிற்காக அனுப்பி இருக்கக்கூடிய பட்டியலில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆதி திராவிடர் காலனியையும் சேர்த்து, அதை விரைந்து முடிப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*